# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

Sessions .. .. Sessions Case No. 34 of 2020

Deposition of witness for { Prosecution PW10
Defence
Court

Name : ராம்குமார்
Father Name : நரேந்திரன்
Village :மதுரை
Taluk :மதுரை
Caste :
Calling :
Religion :
Age :36

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23th day of March 2026.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி தற்காலிக பணிநீக்கத்தில் உள்ளேன். கடந்த 07.05.2019 ம் தேதி சூலக்கரை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது விருதுநகர் என்.ஜி.ஓ காலனியை சேர்ந்த வாழ்ரெட்டியார் மகன் சீனிவாசன் என்பவரும், அவருடன் வந்தவர்களும் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனு, வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரிகளை ஆஜர்படுத்தினர்.

2) மேற்படி புகார் மனு **அ.த.சா.ஆ.6** ஐ பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.145/2019 சட்டபிரிவு 392 இதசவின் படி முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.7** பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, விருதுநகர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். எதிரிகள் பாண்டீஸ்வரன், மணிகண்டன் என்ற வாழகுரு

மணிகண்டன், சுந்தரமகாலிங்கம் ஆகியோர்களை 22.30 மணிக்கு நிலையத்தில் வைத்து கைது செய்தேன்.

3) வழக்கின் சொத்துக்களான வழிபறி செய்த பணம் ரூ.600/–, செல்போன்–3, கத்திகள்–4, TN 67 BH 3595 என்ற இருசக்கர வாகனம் ஆகியவற்றை படிவம் 91 **அ.த.சா.ஆ.8** ன் மூலம் பெற்றேன். மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பு, சொத்துக்கள் மற்றும் எதிரிகளை பொறுப்பு காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் செல்போன்கள்–3 எண்ணம் **சா.பொ.1** ஆகும். கத்தி–4 எண்ணம் **சா.பொ.2** ஆகும். பணம் ரூ.600/– **சா.பொ.3** ஆகும். TN 67 BH 3595 என்ற இருசக்கர வாகனம் **சா.பொ.4** ஆகும். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) வழக்கு சொத்துக்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றவில்லை, படிவம்–91 ன் மூலம் வழக்கு சொத்துக்களை பெற்றேன். நான் சொன்ன நேரத்தில் அ.சா.1 காவல்நிலையம் வந்து புகார் மனு கொடுக்கவில்லை என்றும், எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் ஆஜராகி ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எழுதப்படாத வெற்றுப்பேப்பரில் அ.சா.1 யிடம் கையொப்பம் பெற்று பின்னிட்டு புகார் மனு தயார் செய்தேன் என்றால் சரியல்ல. 07.05.2019 ம் தேதி இரவு 8.15 மணியளவில் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை மறுநாள் 08.05.2019 ம் தேதி மாலை 5.25 மணிக்கு நீதிமன்றத்தில் பெறப்பட்டது என்றால் சரிதான். சுமார் 16 மணிநேரம் காலதாமதமாக புகார் மனு நீதிமன்றத்திற்கு ஒப்படைப்பதற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் விசாரணையை காவல் ஆய்வாளர் மேற்கொண்டார்.

5) சிம்கார்டு இல்லாமல் செல்போன் மட்டும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி செல்போன்களில் IME எண் வைத்து அதன் உரிமையாளர் யார் என்பதை கண்டுபிடித்தேனா என்றால் அதன் விபரம் காவல்

ஆய்வாளருக்கு தான் தெரியும். நான் சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.